# காலாண்டுத் தேர்வு- 2024

( மாதிரி வினாத்தாள்)

## பொதுத் தமிழ்-11

மதிப்பெண் :90 நேரம்: 3 மணி

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 x 1 = 14

1. பாயிரம் இல்லது __________ அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) களி ஈ) அமை

2. ஐங்குறுநூறு குறிப்பிடாத தமிழர்களின் நிலம் ________.

அ) பனியும், பனி சார்ந்த நிலமும்

ஆ) மலையும் மலை சார்ந்த நிலமும்

இ) காடும் காடு சார்ந்த நிலமும்

ஈ) வயலும் வயல் சார்ந்த நிலமும்.

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன\`\`\`\`\`\`\`\`.

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

4. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

| | | | |
|---|---|---|---|
| அ) | ஏதிலிக் குருவிகள் | - | மரபுக்கவிதை |
| ஆ) | திருமலை முருகன் பள்ளு | - | சிறுகதை |
| இ) | யானை டாக்டர் | - | குறும்புதினம் |
| ஈ) | ஐங்குறுநூறு | - | புதுக்கவிதை |

5. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் __________.

அ) மார்ச் 20 ஆ) ஏப்ரல் 20 இ) மே 20 ஈ) ஜீன் 20

6. ஒப்புரவு என்பதன் பொருள் ________.

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது.

7. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்.

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம்

ஈ) பகுதி, விகுதி.

8. “ஒற்றை வைக்கோல் புரட்சி” என்னும் நூலை எழுதியவர் யார்?

அ) கவிஞர் மல்லார்மே ஆ) மலையாளக் கவி ஆற்றூர் வர்மா

இ) மசானபு.:.புகோகா ஈ) வால்ட்விட்மன்.

9. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

10. “பிள்ளைக்கூடம்” – என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?

அ) போதனார் ஆ) தொல்காப்பியர் இ) பாரதியார் ஈ) இரா.மீனாட்சி

11. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாசி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

12. இறகுகளின் தொகுதியை __________ என்பர்.

அ) சிறகு ஆ) இறக்கை இ) தாழை ஈ) சாத்து

13. செங்கயல் - இலக்கணக்குறிப்பு தருக.

அ) எண்ணும்மை ஆ) உருவகம் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

14. னுழஉரஅநவெ என்பதன் கலைச்சொல்.

அ) ஆவணம் ஆ) ஒப்பந்தம் இ) ஏடு ஈ) இவை அனைத்தும்

பிரிவு–2

**II. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

16. சீர்தூக்கி ஆராய வேண்டிய பண்புகள் யாவை?

17. காவடிச்சிந்து என்பது யாது?

18. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

பிரிவு–3

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20. “கோட்டை” என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

பிரிவு–4

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 x 2 = 14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அலர்ந்து ஆ) ஈன்ற

23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பூஞ்சோலை ஆ) செங்கயல்

24. ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக.

அ) மாநகர் ஆ) வெண்சுவை

25. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.

உலை, உளை, உழை

26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) பிண்ணாக்கு ஆ) வைகை

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

28. பிறமொழிச் சொற்களைத் தமிழ்படுத்துக.

அ) போலீஸ் ஆ) சந்தோ'ம்

29. கலைச்சொல்லாக்கம் தருக.

அ) ஆபைசயவழைெ ஆ) ஊரடவரசந

30. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.

**V. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

33. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

34. “சலச வாவியில் செங்கயல் பாயும்” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 7 x 2 = 14

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?னும் கருத்தை எழுதுக.

36. மலை மனித வாழ்வில் சிறப்பிடம்பெற்றுள்ளது–என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

**VII. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 7 x 2 = 14

39. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

சொல் பின்வரும் நிலையணியை சான்று தந்து விளக்குக.

40. மொழிமுதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.

41. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

( மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி )

1. எலியும் நுழையும்: எழிலரசி கையும் நுழையும் ___________.
2. அடிக்கவும் செய்யலாம்: கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ________.
3. அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவே தான் ______.
4. பூவின் உறுப்பும் நானே: புன்னகையின் பிறப்பிடமும் நானே ______.

42. தமிழாக்கம் தருக.

1. Union is Strength
2. Work is worship
3. No joy without alloy.
4. One flower makes no garland.

43. இயற்கை அல்லது நிலா என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதிடுக.

VIII. அனைத்து வினாக்களுக்கு விடை தருக. 3 x6 = 18

44. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை – தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை குறள் வழி விளக்குக.

45. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரி.

(அல்லது)

பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக் கல்வி, முறைகளால் தமிழகக்கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

(அல்லது)

பாரதியார் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

www.Padasalai.Net

**IX. அடிபிறாமல் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) "அம்மவாழி"...... எனத் தொடங்கும் குறுந்தொகை பாடலை அடிமாறாமல் எழுதுக.

ஆ) "செயல்" - என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

www.Padasalai.Net